**என்.எஸ்.என்.நினைவு மேல்நிலைப்பள்ளி**
திருமுருகன்சாலை, திருமுருகன்நகர், சிட்லப்பாக்கம், சென்னை - 600064,

வகுப்பு - ஐந்து **7.8.2022**

தமிழ் பயிற்சித்தாள்

**I. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. அறியாமை என்னும் இருளைப் போக்குவது -----------------**

**அ. பொருள் ஆ. வீரம் இ. கல்வி ஈ. சோம்பல்**

**2. ஐயமில்லை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------**

**அ. ஐயம் + மில்லை ஆ. ஐயம் + இல்லை**

**இ. ஐயம் + யில்லை ஈ. ஐயம் + இலை**

**3. இம் ------ x மறு------ கோடிட்ட இடங்களில் வரும் ஒரே எழுத்து எது?**

**அ. பை ஆ. வை இ. கை ஈ. மை**

**4. பழைமை என்பதன் எதிர்ச்சொல் ------------------**

**அ. தொன்மை ஆ. நன்மை இ. புதுமை ஈ. தீமை**

**5. கற்றறிந்தவன் வறுமையிலும் ---------------------- ஆக இருப்பான்.**

**அ. ஏழ்மை ஆ. செழுமை இ. செம்மை ஈ. இனிமை**

**6. ----------------- களர்நிலத்திற்கு ஒப்பாவார் என்று கூறியவர் பாரதிதாசன்.**

**அ. கற்றவர் ஆ. கல்லாதவர் இ. பணக்காரர் ஈ. எளியோர்**

**7. "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்று குறிப்பிடுவது ----------------- நூல்.**

LIVEWORKSHEETS

அ. மூதுரை ஆ. இனியவை நாற்பது

இ. திருக்குறள் ஈ. ஆத்திசூடி

8. கல்விச்செல்வமே மிகவும் சிறந்த செல்வம் எனக் கூறியவர்

அ. ஔவையார் ஆ. பாரதியார்

இ. திருவள்ளுவர் ஈ. பாரதிதாசன்

9. தொலைக்காட்சி என்ற சொல்லை பிரித்து எழுதுக. --------

அ. தொல்லை + காட்சி ஆ. தொலை + காட்சி

இ. தொலைவு + காட்சி ஈ. துலை + காட்சி

10. பொருள் + இல்லார்க்கு என்ற சொல்லைச் சேர்த்து எழுதுக.

அ. பொருள்ளில்லார்க்கு ஆ. பொருளில்லார்க்கு

இ. பொருள்இல்லார்க்கு ஈ. பொருளிஇல்லார்க்கு

LIVEWORKSHEETS